

26 மார்ச் 2026

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட
முன்னாள் செயலாளரும்,
திருச்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்
முன்னாள் அமைச்சருமான

திருச்சி
Er. N. செல்வராஜ் B.E., MIE

நீங்கா நினைவுகளுடன்...

என்றும் உங்கள் நினைவில்

N.S. கலைராஜா B.E., MBA.,
NSK பில்டர்ஸ் (பி) லிமிடெட்

N.S. கருணைராஜா B.Tech., MBA.,
தலைமை செயற்குழு உறுப்பினர்,
திருச்சி வடக்கு மாவட்டம்



12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 26.06.1935

மறைவு 26.03.2014



தெய்வத்திரு மிசா ஆ.ஆதிசிவம் (Rtd.DUNLOP)

அம்பத்தூர் சிவானந்த நகர் கிளைக்கழக தொண்டர். டன்லப் தொழிற்சங்க கமிட்டி உறுப்பினர், அண்ணல் அம்பேத்கர் டன்லப் கலாச்சார பேரவை முன்னாள் தலைவர். 1976 மிசா காலத்தில் திமுக வேட்டி துண்டு அணியக்கூடாது என்று எச்சரித்தும், திமுக வேட்டியும், தோளில் கறுப்பு சிவப்பு துண்டுதான் எங்கள் அடையாளம், எங்கள் உயிர் மூச்சு என்று அணிந்து மிசா காலத்தில் சிறை சென்று வந்தவர். தன் இறுதிகாலம் வரை திமுக தொண்டராக பெரியார், அண்ணா, தலைவர் கலைஞர், அண்ணன் தளபதி ஆகியோரின் தொண்டனாகவே வாழ்ந்து மறைந்தவர். அப்பா ஆதிசிவத்திற்கு 12-ஆம் ஆண்டு நினைவு நாளில் எங்கள் வீர வணக்கம் செலுத்துகிறோம்.

மகன்கள்

ஆ.வில்வமணி B.Sc.,

ஆ.கிருஷ்ணசாமி B.A.,B.L..,MLA., Ex.M.P
ஆதிதிராவிட நலக்குழு மாநில செயலாளர்,
தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர்


# திருநங்கை மசோதா மனித உரிமைக்கு எதிரானது!

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கடும் எதிர்ப்பு!

புதுடெல்லி, மார்ச் 26-

திருநங்கைகள் தொடர்பான திருத்த மசோதா மீதான விவாதத்தில் தி.மு.க. கடும் எதிர்ப்பை முன்வைத்துள்ளது.

திமுக சார்பில், தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார்.

மசோதா விவாதத்தில் பேசிய அவர், இது சாதாரண சட்ட திருத்தம் அல்ல; மனித உரிமை, மரியாதையுடன் வாழும் உரிமை மற்றும் ஒரு சமூகத்தின் இருப்பை பற்றிய கேள்வி என்றும் வலியுறுத்தினார்.

“ஒரு நபரின் அடையாளத்தை அரசு தீர்மானிக்க முடியாது. தங்களுக்கு உரிய மரியாதை பெறுவதற்கு முன் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும் என்ற எண்ணத்தையே நான் எதிர்க்கிறேன்” என்று அவர் தெரிவித்தார்.

மேலும், திருநங்கை சமூகத்தின் குரல்கள் இந்த மசோதா கொண்டு வருவதற்கு முன் கேட்கப்படவில்லை என்றும், சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஆலோசனை நடத்தப்படவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

உச்சநீதிமன்றத்தின் NALSA தீர்ப்பை மேற்கோள் காட்டிய அவர், சுய அடையாளம் என்பது தனிநபர் சுதந்திரத்தி ற்கும் மரியாதைக்கும் அடிப்படை உரிமை என்றும், இந்த மசோதா அந்தக் கொள்கையை



முற்றிலும் மறுக்கும் வகையில் உள்ளது என்றும் கூறினார்.

இந்த மசோதா திருநங்கைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாக ஒன்றிய அரசு கூறினாலும், உண்மையில் அடையாளத்தை தாழ்மைப்படுத்தி, அரசின் கண்காணிப்பை அதிகரிக்கும் முயற்சியாக உள்ளது என்றும் அவர் விமர்சித்தார்.

“ஒரு சாதாரண ஆண் அல்லது பெண் தங்கள் பாலினத்தை நிரூபிக்க மருத்துவ சான்றிதழ் அளிக்க வேண்டுமா? கிடையாது. ஆனால் திருநங்கை நபர்களிடம் தங்களின் அடையாளத்தை மருத்துவ வாரிய மூலம் நிரூபிக்க வேண்டும் என்ற நிபந்தனை ஏன்?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், இந்த மசோதா திருநங்கை என்ற வரையறையை நிருக்கியுள்ளது. இதில், திருநங்கை பெண்கள், திருநங்கை ஆண்கள், NONBINARY மற்றும் GENDERQUEER நபர்கள் போன்ற பலரையும் தவிர்க்கும் அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மசோதா தனியுரிமையையும் பாதிக்கிறது என்றும், புட்டுசாமி வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு (RIGHT TO PRIVACY) வழங்கிய அடிப்படை உரிமைக்கு எதிரானதாகவும் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பழமையான சமூகப் பிரிவுகள் அடிப்படையில் அடையாளத்தை கட்டுப்படுத்துவது, திருநங்கை சமூகத்தை சமூகத்தில் இருந்து மேலும் துண்டிக்கக் காரணமாகும் என்றும் மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் எச்சரித்தார்.

மேலும், இந்த மசோதா கட்டாயப்படுத்தல், கடத்தல் போன்ற குற்றங்களைத் தடுப்பதாக கூறினாலும், அது திருநங்கைகளுக்கு ஆதரவான அமைப்புகளை சந்தேகப்படுத்தும் வகையில் உள்ளதால், அவர்களை மேலும் புறக்கணிப்பதற்கே வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

“இந்த மசோதா கொள்கை விவாதம் அல்ல; இது ஒரு சமூகத்தின் உயிர்வாழ்வு பற்றிய கேள்வி” என்றும் அவர் வலியுறுத்தினார்.

அரசு கடந்த ஒரு தசாப்தமாக உரிமைகளை சலுகைகளாக மாற்றி, தனிநபர் சுதந்திரத்தை அபாயமாக காட்டும் போக்கை பின்பற்றி வருகிறது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

“பல்வேறு சந்தேகத்துடன் உள்ள ஒரு சட்டத்தை நம்புமாறு மத்திய அரசு திருநங்கை சமூகத்திடம் ஏன் கேட்கிறது? உச்சநீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய சுய அடையாள உரிமையை ஏன் பறிக்க முயல்கிறது? மருத்துவ சான்று முறையை ஏன் மீண்டும் ஒன்றிய அரசு கொண்டு வருகிறது?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

மிசேல் ஃபூகோவின் கருத்தை மேற்கோள் காட்டிய அவர், “நிரந்தர கண்காணிப்பு என்பது மனிதர்களை திருத்தப்பட வேண்டியவர்களாக பார்க்க வைக்கிறது” என்றும், அதுபோல இந்த ஒன்றிய அரசு திருநங்கை சமூகத்தை அணுகுகிறது என்றும் விமர்சித்தார்.

தமிழ்நாடு சமூக நீதி, மரியாதை மற்றும் இணைச் சேர்க்கை நிர்வாகத்தை முன்னிறுத்தும் மாநிலம் என்றும், அந்த அடிப்படையில் இந்த மசோதாவை திரும்ப பெற வேண்டும் என்றும், குறைந்த பட்சம் பாராளுமன்ற நிலைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.

“ஒரு நாட்டின் மதிப்பு அங்குள்ள சக்தி வாய்ந்தவர்களை எப்படி நடத்துகிறது என்பதில் இல்லை; குரல் கேட்கப்படாத சமூகத்தினரை எப்படி நடத்துகிறது என்பதால்தான் அளவிடப்படுகிறது”.

இவ்வாறு அவர் தனது உரையில் வலியுறுத்தினார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம்,மயிலை கிழக்கு பகுதி ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எம்.செல்வம் மாவட்ட கழக செயலாளர் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலுவிடம் வாழ்த்துப் பெற்றனர். உடன் பகுதி செயலாளர் எஸ்.முரளி, 125 வது வட்ட கழக செயலாளர் அ.தவநேசன், மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.ரவிச்சந்திரன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் திவாகர் (எ) ஆனந்த் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.